அந்தத் தொழிலை நடத்துகிறவர்கள் நூல் விலையேற்றம் வேறு சில காரணங்களினால் மிகவும் ஸ்தம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய வருங்காலத்தை உத்தேசித்து அவர்களுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான காரியங்களை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 12 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தியாகிறது நம் மாநிலத்தில். இதில் 75% வெளி மாநிலங்களில் விற்கப்படுகிறது. நம் மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி எடுத்தால் அரசாங்கம் ஒத்துழைப்பு தரலாம். நூலைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது விலை ஏறுகிற சமயத்தில் அரசு தலையிட்டு குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

### மாயூரத்தில் தொழிற்பேட்டை

* 269 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தற்போது இல்லை.

### வாலாஜாபேட்டையில் தொழிற்பேட்டை

* 270 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜா நகராட்சி எல்லையில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை.

### *Bridge across Cooum near Poonamallee*

* 271Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a bridge across the Cooum on the road leading to Tiruverkadu near Poonamallee;

(*b*) if so, the estimated cost of the bridge; and

(*c*) the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ), (இ) & (உ): மேற்கு பெருவழி தேசிய நெடுஞ்சாலையில் மைல் 10/4-ல் திருவேற்காடு அருகில் தேவி கருமாரி அம்மன் கோவிலுக்கு பிரியும் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே எழு இலட்ச ரூபாய் மதிப்பளவில் ஒரு மூழ்குப் பாலம் கட்ட அரசு பிப்ரவரி 71-ல் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வேலையை செய்ய ஒப்பந்தம் முடிவு ஆகிவிட்டது. வேலை விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

1971 ஜூலை 16]

DR. H. V. HANDE : Tiruverkadu is an important place because daily from Madras some thousands of persons go there for dharsan. May I know from the Hon. Minister the exact date on which this work will commence and the probable date by which the work will be over What are the steps the Government going to take to expedite the work?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டெண்டர் முடிவுசெய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. விரைவில் வேலை தொடங்கப்படும். கருமாரியம்மன் கோவிலுக்குப் போகிற இடத்தில் ஒரு காஸ்வே இருக்கிறது. அந்த காஸ்வேயை கட்டவேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அந்தக் காஸ்வேயைக் கட்டுவதால் கிராம மக்களுக்குப் பயன் கிடைக்காது என்று சொல்லி அந்தக் கிராம மக்களும், தொகுதி எம்.எல்.ஏ. யும் சொல்லியதற்குப் பிறகு வேறு ஒரு இடத்தில் போடப்பட்டு மீண்டும் அந்த காஸ்வேயை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற கோரிக்கை பெறப்பட்டது.

The existing causeway has been affected by recent rains.

The rough stone embankment on either side of the vented causeway has been washed off as the course of the river has been changed, and that therefore the following provisions will have to be made for repairing the causeway :—

(1) Apron will be provided on both upstream and downstream with retaining wall throughout line at waterway;

(2) Additional rows of R.C.C. hume pipes 3 feet diameter will be provided in washed out portions to enable free flow of water so that there cannot be any breach in future.

The retaining wall of the causeway will be extended on both sides for a length of 100 feet. The existing cement concrete pavements will be extended for the whole length of the causeway.

The existing top level of the causeway will be reduced to avoid obstruction to flow in flood periods.

The approximate cost of repairs for the existing causeway works out to Rs. 85,000.

அந்தக் கோவிலுக்குப் போகிற இடத்திலுள்ள காஸ்வேயை புதுப்பிக்க திட்டம் இருக்கிறது. இன்னொரு பால வேலையும் இருக்கிறது. அது உடனடியாகத் துவக்கப்படும் என்று நம்புகிறேன். ஆறு மாத காலத்திற்குள்ளாக முடியும் என்று நம்புகிறேன்.

### வழுக்குப்பாறை, வரட்டுப்பள்ளத்தில் அணைகள்

*272 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள வழுக்குப்பாறை, வரட்டுப்பள்ளம் அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?